**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 366/2025**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 18.11.2025.**

| | |
|---|---|
| **Name : மகேந்திரன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.02.2025-ம் தேதி மாலை 5 மணிக்கு இவ்வழக்கில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, சேலம் ப்ரீத்தம் மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த சின்னதாயி என்பவர் பேச முடியாத நிலையில் அவருக்கு உதவியாக இருந்த ராஜி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிறகு நிலையம் வந்து வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண்.45/2025 ச/பி 281, 125(a) BNS பிரிவில் வழக்கு பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும்.**

2) பிறகு காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் கடந்த 04/02/2025-ம் தேதியன்று மாலை 06.00 மணிக்கு சம்பவயிடம் உப்பாரப்பட்டி காட்டு வளவு மனோகர் விவசாய நிலம் அருகே சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் நந்தகுமார் மற்றும் மணி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர்தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** ஆகும். பிறகு காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் கோவிந்தராஜ் அவர்கள் காயமடைந்த சின்னதாயி என்பவர் கடந்த 11.02.2025 ம் தேதி சிகிச்சை

பலனின்றி இறந்த பின்னிட்டு சட்டப்பிரிவு 281, 125(a) BNS பிரிவிலிருந்து 281, 106(1) BNS பிரிவு மாறுதல் அறிக்கை வாயிலாக மாற்றப்பட்டது. பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும். பிறகு வழக்கு கோப்பு என் வசம் ஒப்படைக்கப்பட்டது.

3) பிறகு சாட்சிகள் ராஜி, வேலுசாமி, குணசேகரன், மணி, நந்தகுமார், செல்வம், ராமு, சின்னபையன், சத்தியநாதன், மருத்துவர் அருண்ராஜமாணிக்கம், பரோஸ் அகமத், காஞ்சனா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முன்பாக இவ்வழக்கில் காயம்பட்ட சின்னதாயி என்பவர் சேலம் ப்ரீத்தம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, கடந்த 10.02.2025-ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனவே சிகிச்சை அளிக்கப்பட்ட மருத்துவர் பரோஸ் அகமத், அருண்ராஜமாணிக்கம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதியப்பட்டது. இறப்பு உறுதியறிக்கை **அ.சா.ஆ-6** ஆகும். ப்ரீத்தம் மருத்துவமனையில் வழங்கப்பட்ட போலிஸ் இன்டிமேஷன் **அ.சா.ஆ-7** ஆகும். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.8** ஆகும்.

4) பின்னர் நான் பிரேதத்தின் மீது இறப்பின் உன்மை தன்மை அறியும் பொருட்டு பிரேத விசாரணை பஞ்சாயத்தார் முன்னிலையில் செய்யப்பட்டது. **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும்.** இறப்பின் உண்மை தன்மை அறிய வேண்டி மருத்துவர் காஞ்சனா அவர்களிடம் காவலர் பாரதியார் என்பவர் மூலமாக பிரேதம் அடையாளம் காட்டப்பட்டு கடந்த 07.07.2017-ம் மதியம் 01.30 மணிக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. **சடலகூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.10.** ஆகும். பிறகு நல்லடக்கம் செய்வதற்காக உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

5) விபத்தில் ஈடுபட்ட TN-93 F 2805 Royan enfield bullet இரு சக்கர வாகனத்தை கைபற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் இயந்திரகோளாறு உள்ளதா என ஆய்வு செய்ய ஆய்வாளர் திருமதி.மீனாகுமாரி வசம் அனுப்பப்பட்டது. இதன் **இயந்திரகோளாறு அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும்.**

6) கடந்த 10.02.2025 ம் தேதி மதியம் 12.15 மணிக்கு மேச்சேரி காவல் நிலையம் முன்பாக வைத்து கைது செய்யப்பட்டு தக்க நிலையப்பிணையில் விடுவித்தார்.

7) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 02.05.2025-ம் தேதி குற்றஎண்.45/2025 ச/பி 281, 125(a) BNS லிருந்து ச/பி 281, 106 BNS ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

8) நான் சொன்னமாதிரி, சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில், சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் சம்பவயிடம் செல்லாமல் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.